**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 33/2021 PW.11**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மலைராஜ் | த–பெ | பரஞ்ஜோதி |
| ஊர்: | : | மதுரை | சமயம்: | |
| வயது: | : | 69/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | மாவட்ட காவல் ஆய்வாளர் ( ஓய்வு) | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2024

1, 2 வது எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

---------------------------------------------------------------------------------------------------

11.11.2024

**முதல் விசாரணை**

1) நான் காவல்துறையில் ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10.07.2006 அன்று காலை 11.45 மணிக்கு காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 522/2006 பிரிவுகள் 457. 380, 511 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 14 ஆகும்.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகர், ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 15 ஆகும்.** பின்னர் 11.07.2006 அன்று சம்பவ இட சாட்சிகள் வெங்கடாச்சலம், அழகர், ஸ்ரீதர் , பாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை பிரிவு மாற்றம் செய்து 457, 380 இதச படி சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 16 ஆகும்.** பின்னர் வழக்குகோப்பை காவல் ஆய்வாளர் திரு. சண்முகவேல் வசம் ஒப்படைத்தேன்.

## குறுக்கு விசாரணை

1) என்னை யாரும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான்தான் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். என்னிடம் எத்தனை புகார் அளித்தார்கள் என்றால் 2 புகார்கள் அளிக்கப்பட்டது. 10.07.2006 ல் கார் டிரைவர் பாலகிருஷ்ணன் என்பவர் புகார் அளித்தார். மறுநாள் 11.07.2006 ல் வீட்டின் உரிமையாளர் வெங்கடாசலம் புகார் அளித்தார். வீட்டின் உரிமையாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்தேன். கைரேகை நிபுணர்களை நான் வரவழைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தடயங்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. வெங்கடாச்சலம் மறு வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் இல்லை. பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் இல்லை. பார்வை மகஜர் சாட்சிகளான அழகர், ஸ்ரீதர் ஆகியோர் கையிருப்பு சாட்சிகள் என்றால் தவறு. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சாட்சிகளை பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தவறாக கொடுத்த புகாரின் அடிப்படையில் சரியாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
**விரைவு நீதிபதி காரைக்குடி**